

குரோம்பேட்டையில் நடைபெற்ற காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயற்குழு கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் தா.மோ.அன்பரசன் உரையாற்றினார். மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி, வரலட்சுமி மதுசூதனன், து.மூர்த்தி, மாவட்ட கழகப் பொருளாளர் வெ.விசுவநாதன் மற்றும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வீ.தமிழ்மணி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

### கோவை இருகூர் அருகே 13 வயது பள்ளிச் சிறுவன் நண்பர்களால் அடித்துக்கொலை:

# பெற்றோர்களும் - ஆசிரியர்களும் கல்வியறிவோடு பொறுமையையும் அன்பையும் மாணவர்கள் மனதில் விதைக்க வேண்டும்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவில் வலியுறுத்தல்!

சென்னை, மே 19

**கோவை இருகூர் அருகே 13 வயது பள்ளிச் சிறுவன் நண்பர்களால் அடித்துக் கொலை செய்யப்பட்ட செய்தியறிந்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மனதைப் பதைபதைக்க வைக்கிறது என்று வருத்தம் தெரிவித்ததுடன், பெற்றோர்களும், ஆசிரியர்களும் கல்வியறிவோடு பொறுமையையும், அன்பையும் மாணவர்கள் மனதில் விதைக்க வேண்டும் என்று சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.**

இது குறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

கோவை இருகூர் அருகே 13 வயதே ஆன பள்ளிச் சிறுவன் நண்பர்களால் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ள செய்தி மனதைப் பதைபதைக்க வைக்கிறது.

பெற்றோர்கள் நம் பிள்ளைகளைத் தொடர்ந்து கவனிக்க வேண்டும். குழந்தைகள் எதைப் பார்க்கிறார்கள், என்ன பேசுகிறார்கள் எனக் கண்காணித்து, அவர்களிடம் ஏற்படும் உளவியல் மாற்றங்களை அறிந்து, நாம்தான் நல்வழிப்படுத்த வேண்டும்.

பள்ளியில் மாணவர்களுடன் அதிக நேரம் செலவிடும் ஆசிரியப் பெருமக்களும் அவர்களிடம் கல்வியறிவோடு பொறுமையையும் அன்பையும் மனதில் விதைக்க வேண்டும் என்பதையே இந்தக் கொடிய நிகழ்வு நமக்கு உணர்த்துகிறது.

நம் மாநிலத்தின் வருங்காலமே குழந்தைகள்தான். அவர்களைப் பொறுப்புடன் வளர்த்தெடுப்பது நம் அனைவரின் சமூகக் கடமை!

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### நெதர்லாந்து நாட்டில் இருந்த 11-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த

# சோழர் காலச் செப்பேடுகளை தமிழ்நாட்டிடம் ஒன்றிய அரசு ஒப்படைக்க வேண்டும்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!



சென்னை, மே 19

நெதர்லாந்து நாட்டில் இருந்த 11-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சோழர் கால ஆனைமங்கலம் செப்பேடுகள் பிரதமர் மோடியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன! ஒன்றிய அரசு தமிழ்நாட்டு அரசுக்கு அவற்றை அனுப்பி வைப்பது தான் சாலச் சிறந்தது என்றும், தமிழ்நாட்டு முதலமைச்சர் அயராத முயற்சிகளை மேற்கொள்வது முக்கிய கடமையாகும் என்றும் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:

இரண்டு நாட்களுக்கு முன், பிரதமர் மோடி அவர்கள் நெதர்லாந்து நாட்டிற்குச் சென்று அங்குள்ள மன்னர், ராணி, பிரதமர் ஆகியவர்களைச் சந்தித்து, புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் சிலவற்றை ஏற்படுத்தி உள்ளபோது, அந்நாட்டு அரசின் சார்பாக, 11 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சோழர் கால ஆனைமங்கலம் செப்பேடுகள் முறைப்படி பிரதமர் மோடி அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இந்தச் செப்பேடுகள், 18 ஆம் நூற்றாண்டில் டச்சு காலனிய ஆட்சி இங்கே இருந்தபோது, தமிழ்நாட்டின் நாகப்பட்டினத்தில் இருந்து நெதர்லாந்துக்கு எடுத்துச் செல்லப்பட்டவை ஆகும்.

1862 இல் இருந்து அச்செப்பேடுகள் நெதர்லாந்து நாட்டில் உள்ள லெய்டன் பல்கலைக்கழகத்தில் வைக்கப்பட்டிருந்தன.

இத்தகைய செப்பேடுகளை அங்கிருந்து மீட்டுக் கொண்டு வர, தூதரகத்தின் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு - பல ஆண்டு காலம் ஆன நிலையில், காலனியப் பொருள்கள் அந்தந்த நாடுகளுக்குத் திருப்பி அனுப்பப்பட வேண்டும் என்ற 2022 நெதர்லாந்து நாட்டு அரசின் கொள்கை முடிவின்படி, இப்போது அது இந்தியாவிற்கு தரப்படுவது மிகவும் வரவேற்கத் தக்கதாகும். இது ஒரு பண்பாட்டுத் தரவாக, வரலாற்று ஆய்வுக்குப் பெரிதும் சான்றாவணமாகப் பயன்படும் என்பது உறுதி!

நெதர்லாந்து அரசு வழங்கியுள்ள செப்பேடுகள் நமது நாட்டு மக்களுக்கு - குறிப்பாகத் தமிழ்நாட்டின் பண்பாட்டு வரலாற்று - ஆய்வுக் கண்ணோட்டத்தில் முக்கியத்துவம் பெறக்கூடிய ஒன்று.

அதனை ஒன்றிய அரசு தாமதிக்காமல், தமிழ்நாடு அரசிடம் ஒப்படைக்க வேண்டியது அவசியமும், நியாயமும் ஆகும்.

நமக்கு மகிழ்ச்சியும், வியப்பையும் தருகிறது!

ஏற்கெனவே கீழடி ஆய்வு, தண் பொருநை நதி நாகரிகம் இவற்றைக் காத்து நாளும் ஏராளமான புதுப்புது தடயங்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன. முக்கியமான தரவுகள் (கீழடி உள்பட) கிடைத்து வருவது நமக்கு மகிழ்ச்சியும், வியப்பையும் தருகின்ற ஒன்றாகும்.

ஒன்றிய அரசு தமிழ்நாட்டு அரசுக்கு அனுப்பி வைப்பது தான் சாலச் சிறந்ததாகும்!

அந்த அடிப்படையில், ஆனைமங்கலம் செப்பேடுகளையும் தமிழ்நாட்டிற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று தமிழ் பண்பாடு - நாகரிகம் பற்றிய ஆய்வுகளைத் தொடர்ந்து நடத்திட வகை செய்து, அரிய சாதனைகள் செய்த மேனாள் நிதியமைச்சரும், தொல்லியல் துறை அமைச்சரும், தமிழார்வலருமான மானமிகு தங்கம் தென்னரசு அவர்களும், மதுரை தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன் மற்றும் முக்கிய தலைவர்கள் பலரும் விடுத்துள்ள வேண்டுகோளை ஏற்று, ஒன்றிய அரசு தமிழ்நாட்டு அரசுக்கு அனுப்பி வைப்பது தான் சாலச் சிறந்ததாகும்.

அயராத முயற்சிகளை மேற்கொள்வது

முக்கிய கடமையாகும்!

புதிதாக தமிழ்நாட்டில் அமைந்துள்ள த.வெ.க. அரசின் முதலமைச்சர் அவர்களும், இதனை அரசு சார்பில் வலியுறுத்தி ஒன்றிய அரசுக்கு உரிய முறையில் - தெரிவித்து பெற்றுத் தர அயராத முயற்சிகளை மேற்கொள்வது முக்கிய கடமையாகும்.

இத்துறை அமைச்சர் மற்றும் இத்துறை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அனைவரும் உடனடியாக நடவடிக்கையை மேற்கொள்வது முக்கியமாகும்.

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

### வர்த்தகக் கப்பல் மீதான தாக்குதல்:

# ஐ.நா.வின் சிறப்புக் கூட்டத்தில் இந்தியா சார்பில் கண்டனம்!

நியூயார்க், மே. 19-

ஹோர்முஸ் நீரிணையில், வர்த்தகக் கப்பல் மீதான தாக்குதலுக்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

எரிசக்தி மற்றும் அதன் விநியோகத்தை பாதுகாப்பதற்கான ஐ.நாவின் பொருளாதார மற்றும் சமூக சபை சிறப்புக் கூட்டத்தில், ஐ.நா.வுக்கான இந்தியாவின் நிரந்தர பிரதிநிதி ஹரிஷ் உரையாற்றினார்.

அப்போது பேசிய அவர், ஹோர்முஸ் நீரிணையில், வர்த்தகக் கப்பல் மீதான தாக்குதலுக்கு கடும் கண்டனம் தெரிவித்தார்.

மேலும் வர்த்தக கப்பல்கள் மீதான தாக்குதல்கள், ஏற்றுக்கொள்ள முடியாதவை எனவும் அவர் குறிப்பிட்டார். கப்பல் மாலுமிகளை குறி வைப்பதும், கப்பல் போக்குவரத்தின் சுதந்திரத்தை சீர்குலைப்பதையும் நியாயப்படுத்த முடியாது எனவும் ஹரிஷ் குறிப்பிட்டார்.

ஓமன் நாட்டின் கடற்கரைக்கு அப்பால், இந்தியக் கொடியுடன் சென்ற வர்த்தகக் கப்பல் தாக்கப்பட்ட சில நாட்களுக்குப் பிறகு ஹரிஷ் இந்த கருத்துகளை முன்வைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# வரும் 28 ஆம் தேதி பக்ரீத் பண்டிகை: தமிழ்நாடு தலைமை காஜி அறிவிப்பு!

சென்னை, மே 19 -

பக்ரீத் பண்டிகை வருகிற 28ம் தேதி கொண்டாடப்படும் என்று தமிழக அரசின் தலைமை காஜி அறிவித்துள்ளார். இஸ்லாமிய ஐம்பெரும் கடமைகளில் ஒன்று புனித ஹஜ் பயணம் ஆகும். புனித மெக்காவுக்குச் சென்று வர சக்தியுள்ள ஒவ்வொரு முஸ்லிமும் வாழ்நாளில் ஒருமுறையாவது ஹஜ் பயணம் செல்ல விரும்புவார்கள். இஸ்லாமிய மாதமான துல்ஹஜ் மாதம் 10ம் நாள் இந்தக் கடமை நிறைவேறுகிறது. அதே நாளில் உலகம் முழுவதும் உள்ள முஸ்லிம்கள் பக்ரீத் பண்டிகையைக் கொண்டாடுகிறார்கள்.

ஹஜ் கடமை நிறைவேறுவதால் இது 'ஹஜ்ஜுப் பெருநாள்' என்றும், இறைவனின் கட்டளைக்கு ஏற்ப தன் மகன் இஸ்மாயில் (அலை) அவர்களை அறுத்துப் பலியிட முயன்ற நபி இப்ராகீமின் (அலை) தியாகத்தை நினைவு கூரும் வகையில் 'தியாகத் திருநாள்' என்றும் அழைக்கப்படுகிறது. இந்த நிலையில் வரும் 28ம் தேதி பக்ரீத் பண்டிகை கொண்டாடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தமிழ்நாடு அரசு தலைமை காஜி முஃப்தி உஸ்மான் முஹ்யித்தீன் பாகவி வெளியிட்டுள்ள அறிவிப்பில், "துல்ஹஜ் மாதத்திற்கான பிறை தமிழகத்தில் தென்படாததால் இன்ஷா அல்லாஹ் செவ்வாய் கிழமை(நாளை) துல்ஹஜ் மாத முதல் பிறை என்று இஸ்லாமிய (ஷரீஅத்) முறைப்படி அறிவிக்கப்படுகிறது. ஈதுல் அழ்ஹா (பக்ரீத்) பெருநாள் வரும் 28ம் தேதி(வியாழக்கிழமை கொண்டாடப்படும்" என்று கூறப்பட்டுள்ளது.

இது குறித்து தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் மாநில தலைமையகம் வெளியிட்ட அறிவிப்பில், "தமிழகத்தில் பிறை எங்கும் தென்படவில்லை. எனவே இன்று மஹ்ரிபில் இருந்து தமிழகத்தில் துல்ஹஜ் மாதம் ஆரம்பமாகின்றது. வரும் 27ம் தேதி(புதன்கிழமை) அரஃபா நோன்பு என்பதையும் 28ம் தேதி(வியாழக்கிழமை ஹஜ்) பெருநாள் என்பதையும் தெரியப்படுத்திக் கொள்கிறோம்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கே.சந்திரன் தலைமை! கோ.காமராஜ் – இரா.நரேஷ்கண்ணா வரவேற்புரை!

# பம்மல் வடக்குப் பகுதி பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் த.ஜெயகுமார் அறிவிப்பு!

சென்னை, மே.19-

பம்மல் வடக்கு பகுதிச் செயலாளர் த.ஜெயகுமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், தாம்பரம் மாநகரம், பம்மல் வடக்கு பகுதி பொது உறுப்பினர்கள் கூட்டம் பகுதி அவைத் தலைவர் கே.சந்திரன் தலைமையிலும், தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ், தாம்பரம் மாநகர துணைச் செயலாளர் இரா.நரேஷ் கண்ணா எம்.சி. ஆகியோர் வரவேற்புரையிலும், பகுதி கழக துணைச் செயலாளர்கள் மு.ஸ்ரீதர், க.ஜெயசீலன், ஜி.பப்பிதா, பகுதி பொருளாளர் ச.பிரபு, தாம்பரம் மாநகர பிரதிநிதிகள் சி.பார்த்த சாரதி, க.சுந்தர மூர்த்தி, இரா. குமரேசன், இரா.பாபுஜி, ஆகியோர் முன்னிலையிலும் இன்று (19.05.2026 - செவ்வாய்க்கிழமை) மாலை 6 மணிக்கு, திருநீர்மலை நாகப்பா நகர் சி.எல்.சி சாலையில் அமைந்துள்ள ஜி.பி. ஹாலில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்ச்சியில் பம்மல் வடக்கு பகுதி வட்டக் கழக செயலாளர்கள் ப. அன்பழகன், க.மோகன், மு.நி.தமிழ்குமரன், ப. ஆண்டவன். இ.பாலாஜி. டி.எம்.ஜோசப், மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் கலைவாணி பிரபு, வாணிஸ்ரீ விஜயகுமார். சித்ரா தமிழ்குமரன். சண்முகசுந்தரி ஜெயகுமார். சித்ராதேவி முரளிதரன் மற்றும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், தாம்பரம் மாநகர அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பம்மல் வடக்கு பகுதி கழக அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், வட்டக் கழக நிர்வாகிகள், சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றியுரை ஞா.பிரபு பம்மல் வடக்கு பகுதி இளைஞரணி அமைப்பாளர். ப.கார்த்திக் பம்மல் வடக்கு பகுதி மாணவரணி அமைப்பாளர்

பொருள்: 1. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 108 வது பிறந்தநாள் விழா. 2. இன்று 18/5/2026 காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயற்குழு கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவுகள். 3. கழக ஆக்கப் பணிகள்

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



தருமபுரி மேற்கு மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதி மெணசி ஊராட்சியில் கழக உடன்பிறப்புகள் மற்றும் வாக்காளர்களைச் சந்தித்து மாவட்ட செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் நன்றி தெரிவித்தார்.உடன் ஒன்றிய செயலாளர் பி.எஸ்.சரவணன்,ஆசிரியர் ராமகிருஷ்ணன் மற்றும் கழகத்தினர் உள்ளனர்.



திருவள்ளூர் மத்திய மாவட்டம், திருவள்ளூர் மேற்கு ஒன்றிய அவசர ஆலோசனை கூட்டம் காக்களூரில் மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் சாமு.நாசர் ஆலோசனைப்படி முன்னாள் எம்.எல்.ஏ. ஆ.கிருஷ்ணசாமி வழிகாட்டுதல் படி நடைபெற்றது. இதில் ஒன்றிய கழகச் செயலாளர் ஆர். ஜெயசீலன் கலந்து கொண்டு, கழக வளர்ச்சிப் பணிகள் குறித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் ஒன்றிய நிர்வாகிகள் த.எத்திராஜ், கே.கே. சொக்கலிங்கம், கி. தரணி, சாமுண்டீஸ்வரி சண்முகம், டி.கே. சீனிவாசன், டி.எம்.ராமச்சந்திரன், எஸ். பரமேஸ்வரன், எஸ். சௌந்தராஜன், டி. சதீஷ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மேலும் ஒன்றிய கழக நிர்வாகிகள், கிளை கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள் பலரும் பங்கேற்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வி. மோகனன்

### மே 19 (2021)



இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பணியாற்ற தொடங்கியவர்.

புழல் ஒன்றியம், செட்டிமேடு கிளைச் செயலாளராகவும், மாவட்ட பிரதிநிதியாகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.